# அரசாங்க அறிவித்தல்
# மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்
# நிர்மானதாரர்கள் மற்றும் வழங்குநர்களைப் பதிவு செய்தல் - 2021

மாவட்ட செயலாளர், யாழ்ப்பாணம் சார்பில் யாழ் மாவட்ட செயலக திணைக்களப் பெறுகைக் குழுவினால் யாழ் மாவட்ட செயலகம், மற்றும் யாழ் மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலகங்கள் என்பவற்றிற்கு 2021ம் ஆண்டுக்கு கீழ்க் குறிப்பிடப்படும் வேலைகளை மேற்கொள்வதற்கும், பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்காக வடபிராந்தியத்திலுள்ள நிர்மானதாரர்கள் மற்றும் வழங்குநர்களை பதிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. பதிவு செய்ய விரும்புபவர்கள் விண்ணப்பப் படிவங்களை மாவட்டச் செயலக பெறுகை அலகு (அறை இல: 42), மற்றும் பிரதேச செயலகங்களில் **2020-10-28ந்** திகதி தொடக்கம் **2020-11-27ந்** திகதி வரை அலுவலக நேரத்திலோ அல்லது WWW.jaffna.dist.gov.lk என்ற இணையத் தளத்திலிருந்து தரவிறக்கம் செய்தோ பெற்றுக் கொள்ள முடியும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை **2020-11-30** இற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு கடித உறையின் (9"x4" ) இடது பக்க மேல் மூலையில் "நிர்மானதாரர்கள் மற்றும் வழங்குநர்களை பதிவு செய்தல் - 2021" எனக் குறிப்பிட்டு "அரசாங்க அதிபர், பெறுகை அலகு, மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்" எனும் முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். நேரடியாகக் கையளிப்பதாயின் மாவட்டச் செயலகத்தின் பெறுகை அலகில் (அறை இல:42) சமர்ப்பித்தல் வேண்டும்.

மேலும் விண்ணப்பிக்க விரும்புபவர்கள் கட்டட நிர்மாண வேலைகளுக்கு கீழே உள்ள கட்டண விபரத்திற்கமையவும், ஏனைய வழங்குநர்கள் தொகுதி ஒன்றிற்கு ரூபா 500/= இனையும் மீளளிக்கப்படாத வைப்புப் பணமாக "மாவட்டச் செயலாளர், மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்" எனும் பெயரில் உள்ள 7041946 எனும் இலக்க இலங்கை வங்கி கணக்கில் வைப்பில் இடப்படல் வேண்டும். பதிவு செய்யப்பட்டுள்ள சங்கங்கள் இப்பதிவுக்கட்டணத்தை செலுத்தத் தேவையில்லை. வைப்பிலிடப்பட்ட பணத்திற்கான வைப்புச் சிட்டை விண்ணப்ப படிவத்துடன் இணைத்து அனுப்பப்படல் வேண்டும். அவ்வாறு இணைத்து அனுப்பப்படாத விண்ணப்பங்களும் **2020-11-30** க்கு முன்னர் கிடைக்கபடாத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

| **ஒப்பந்த தொகை** | **பதிவுக் கட்டணம்.** |
|---|---|
| ரூபா 2,000,000 க்கு சமமான அல்லது அதற்கு குறைவான ஒப்பந்த தொகை | ரூபா 2,000 |
| ரூபா 2,000,000 க்கு அதிகமானதும் ரூபா 5,000,000 க்கு சமமான அல்லது அதற்கு குறைவான ஒப்பந்த தொகைக்கு | ரூபா 3,000 |
| ரூபா 5,000,000 க்கு அதிகமானதும் ரூபா 10,000,000 க்கு சமமான அல்லது அதற்கு குறைவான ஒப்பந்த தொகைக்கு | ரூபா 5,000 |

**வேலைகள், பொருட்கள் மற்றும் சேவைகளின் தெகுதி விபரம்.**

1. காகிதாதிகள், எழுதுகருவிகள், மற்றும் பாடசாலை உபகரணங்கள்.
2. கணனிகள், அச்சிடும் உபகரணங்கள், மற்றும் தகவல் தொழில்நுட்ப சாதனங்களும், அவற்றுக்கான உபகரணங்கள், மற்றும் நுகர்வுப் பொருட்கள். (ரோனர் மற்றும் றிபன்)
3. அச்சிடுதல், புத்தகம் கட்டுதல், இறப்பர் முத்திரைகள், திகதி முத்திரைகள் பிளாஸ்ரிக் பெயர் பலகைகள், மற்றும் அலுவலக அடையாள அட்டைகள்.
4. இலத்திரனியல் மின்சாரப் பொருட்கள் மற்றும் மின் உபகரணங்கள்.
5. இயந்திரங்களும் அதன் உதிரிப்பாகங்களும்.
6. மோட்டார் வாகனங்களின் உதிரிப்பாகம் வழங்கல், திருத்துதல்.
7. விளையாட்டுப் பொருட்கள் மற்றும் சேவைகள்
8. காலை, மதிய, மற்றும் இரவு, உணவு வகைகள், சிற்றுண்டி வகைகள்.
   குடிநீர்வகைகள், பால் மா வகைகள், உள்ளூர் உணவு உற்பத்தி மற்றும் சிற்றுண்டி வகைகள்.
9. அழகு சாதனப் பொருட்கள், பிளாஸ்ரிக் உற்பத்திகள், தோல் உற்பத்திகள், மற்றும் சமயல் உபகரணங்கள். (சில்வர் மற்றம் ஏனையவை )
10. கட்டிடப் பொருட்கள் மற்றும் உபகரணங்கள்
11. மேசைவிரிப்புக்கள், படுக்கை விரிப்பு, நிலவிரிப்புக்கள், மற்றும் துணிவகைகள்
12. தளபாடம் மற்றும் திருத்தம்
13. விவசாய உபகரணங்கள்.
14. மீன் பிடி உபகரணங்கள்
15. மருந்துப் பொருட்களும் உபகரணங்களும்.
16. சூரிய மின் கலங்கள் மற்றும் திருத்தங்கள்
17. நீர் சுத்திகரிப்பு இயந்திரங்கள்
18. கட்டிடங்கள், வீதிகள், பாலங்கள் நிர்மாணிப்புக்கள்
19. பாதுகாப்பு சேவை, ஒலிபெருக்கி மற்றும் ஒலிவாங்கி சேவை, புகைப்படப்பிடிப்பு, ஒளிப்படப்பிடிப்பு, படைப்பு (புத்தாக்க) முகவர். (Creative agencies), வளிபதனாக்கிகள் சுத்திகரிப்பு சேவை, பிரதியெடுக்கும் இயந்திர சுத்திகரிப்பு, மோட்டார் வாகன சுத்திகரிப்பு சேவை, மலசல கூடங்கள் சுத்திகரிப்பு மற்றும் அலுவலக சுத்திகரிப்பு சேவை.

தலைவர்,
திணைக்களப் பெறுகைக்குழு,
மாவட்ட செயலாளருக்காக,
மாவட்டச் செயலகம்,
யாழ்ப்பாணம்.